இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 13-06-2023

# தொடரும் வேளாண் புரட்சி!

தமிழ்நாட்டில் வேளாண் புரட்சி தொடர்ந்து நடந்து வருவதாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் தெரிவித்திருப்பதைத்தான் பார்க்கிறோம்!

'நானும் ஒரு விவசாயி' என்று சொல்லிக் கொண்டு இருந்தார் முன்பு ஆண்ட பழனிசாமி. ஆனால் சும்மா வாய் வார்த்தையாக, தனது இயலாமையை மறைப்பதற்காக அவர் போட்டுக் கொண்ட வேடம் அதுவே தவிர வேறல்ல. மூன்று வேளாண் சட்டங்களையும் விழுந்து விழுந்து ஆதரித்தவர் அவர்தான். 'அது பற்றி என்னிடம் விவாதிக்கத் தயாரா?' என்று ஊடகவியலாளர்கள் முன்னால் சவால் விட்டவர் அவர். 'டெல்லியில் போராடும் விவசாயிகளிடம் போய் விவாதிக்கவும்' என்று அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். அந்தளவுக்கு வாய்ச்சவடால்களில்தான் பழனிசாமி மூழ்கியிருந்தாரே தவிர, உருப்படியான காரியங்கள் எதையும் செய்யவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சி மலர்ந்தது முதல் வேளாண்மைக்கான திட்டமிடுதல்கள் துரிதமாயின.

**வேளாண்மைக்காக தனிநிதி நிலை அறிக்கையை உருவாக்கிக் கொடுத்ததே முதலமைச்சர் அவர்களின் மாபெரும் சாதனையாகும். மூன்று வேளாண் சட்டங்களை உருவாக்கி மண்ணில் இருந்து உழவர்களை ஒதுக்கித் தள்ளும் மூன்று சட்டங்களை பா.ஜ.க. அரசு கொண்டு வந்த காலக்கட்டத்தில் வேளாண்மைக்கென தனி நிதி நிலை அறிக்கையைக் கொண்டு வந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'நானும் டெல்டாகாரன்தான்' என்பதை செயல் மூலம் காட்டினார் முதலமைச்சர் அவர்கள். இதன் மூலமாக மண்ணும் மக்களும் மகிழ்ச்சியில் திளைப்பதை இரண்டு ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம்.**

**உற்பத்தி பெருகி இருக்கிறது. உற்பத்தி செய்யும் பரப்பும் அதிகரித்து இருக்கிறது. இது நல்லாட்சியின் அடையாளங்கள் ஆகும்.**

இருபது ஆண்டுகள் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி புதிய உச்சத்தைத் தொட்டுச் சாதனை படைத்தது. 2014-15ஆம் ஆண்டில் 1.2 கோடி மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டதே இதற்கு முந்தைய சாதனையாக இருந்தது. 2020-21ஆம் ஆண்டில் 1.04 கோடி மெட்ரிக் டன்னாக இருந்த நெல் உற்பத்தி, 2022 ஆம் ஆண்டு 1.22 கோடி மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. அதேபோல், 2020-21ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி பரப்பளவு 20.36 லட்சம் ஹெக்டேராக இருந்த நிலையில், கடந்த ஆண்டு 22.05 லட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. இந்த வேளாண் மலர்ச்சியானது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

★காவிரிப்பாசனப்பகுதியில்உள்ளகால்வாய்களைத்தூர்வாருவதற்காக 2021-22 ஆம் ஆண்டில் 62.91 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3ஆயிரத்து859கிலோமீட்டர்நீளமுள்ளகால்வாய்கள்தூர்வாரப்பட்டன. 4.90 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியும், 13.341 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு 39.73 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

★ 2022-23 ஆண்டுக்கான திட்டத்தில் காவிரி பாசனப்பகுதிகளில் கால்வாய்களைத் தூர்வாருவதற்காக 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் கடைமடை வரை தண்ணீர் சென்றது. இதனால் முந்தைய ஆண்டை முறியடித்தது உற்பத்தி. 5.36 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியும் - 13.53 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் நடந்தது. இதனால் 41.45 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

★ இந்த ஆண்டும் தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதற்காக 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நீர்வளத்துறை மட்டுமல்ல, வேளாண் பொறியியல் துறையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இவையுடன் குளம், குட்டைகளும் தூர்வாரப்பட்டு வருகின்றன. எனவே, முந்தைய இரண்டு ஆண்டுகளை விட உற்பத்தி அதிகம் ஆகும் என உறுதியாக நம்பலாம்.

**வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், வேளாண் நிதிநிலை அறிக்கையின் தொடக்கத்தில் ஒன்றைச் சொல்லி இருந்தார். "வேளாண்மை என்பது தேடுதலாகத் தொடங்கி, நாகரீகமாக மருவி, வாழ்வாக மலர்ந்து, மக்களை வாழ்வித்த நிலை மாறி - நாளடைவில் பிழைப்பாகப் பிசகி, பிறழ்ந்த நிலையை மாற்றி - பணியாக மருவி, தொழிலாக உயர்ந்து - மீண்டும் தமிழ்நாடு எங்கும் பசுமை தழைத்தோங்க, பயிர்கள் செழித்தோங்க - 'குடியானவன் வீட்டுக் கோழிமுட்டை, அதிகாரி வீட்டு அம்மியாலும் உடையாத' அளவுக்கு அவர்கள் வாழ்வு சமூகத்தில் - பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது தான் வேளாண்மை நிதிநிலை அறிக்கை" - என்று சொல்லி இருந்தார். அதனை இன்று கண்முன்னே காண்கிறோம்.**

நிலத்திலும் - உழவர் மக்கள் மனத்திலும் பசுமை மலர்ந்து வருவதைப் பார்க்கிறோம். திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளைப் பார்வை யிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள். லால்குடி அருகில் ஆலங்குடியில் கால்வாய் வெட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்களைச் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். "கூலி, சம்பளம் எல்லாம் முறையாகக் கிடைக்கிறதா?" என்று கேட்டார் முதலமைச்சர். 285 ரூபாய் கூலி முறையாக வருகிறது என்றும், 100 நாட்கள் வேலைகள் கிடைப்பதாகவும் அந்தப் பெண்கள் சொன்னார்கள். ஏதாவது குறை இருந்தால் சொல்லுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, "குறை எதுவும் இல்லை, நினைத்ததை எல்லாம் நிறைவேற்றி விட்டீர்கள் சார், மிகவும் சந்தோசமாக இருக்கிறது, சொன்னதை எல்லாம் செய்துவிட்டீர்கள்" என்று அந்தப் பெண்கள் சொன்னதாக 'தினத்தந்தி' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

**"வேளாண்மையில் புரட்சி ஏற்படுத்துவோம்!" என்று சொன்னார் முதலமைச்சர் அவர்கள். அதனையும் செய்து காட்டி இருக்கிறார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## தருமபுரி கிழக்கில் மருத்துவ முகாம்!

### தடங்கம் சுப்ரமணி துவக்கி வைத்தார்!

தருமபுரி, ஜீன் 13-

தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வினையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து தருமபுரி ரோட்டரி ஹாலில் இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் பொதுமக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் நகரச் செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்ற தலைவர் லட்சுமி, நகர் மன்ற துணை தலைவர் நித்யா அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் ரேணுகா தேவி, அவைத் தலைவர் செல்வ ராஜ், நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன், ஐ.டி, விங் கௌதம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஹரிவிக்னேஷ், முன்னாள் நகர செயலாளர் மே.அன்பழகன், தடங்கம் இளைய சங்கர், ஜி.பழனிச்சாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்களின் புதல்வர் தி.சிற்றரசுக்கும் – தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை முன்னாள் தலைவர் (நினைவில் வாழும்) வி.எம்.ஆர். சபாபதி அவர்களின் பெயர்த்தி எழிலரசிக்கும், ஜுலை 9 அன்று, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறவிருக்கிறது. அதற்கான அழைப்பிதழை, முதல்வர் அவர்களை, 10.6.2023 அன்று அவரது இல்லத்தில் இரு வீட்டினரும் சந்தித்து வழங்கினர். தொ.மு.ச. பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அப்போது உடனிருந்தார்.

தயாநிதி மாறன் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில் - ரூ.1.20 கோடி மதிப்பில் சென்னை - அண்ணா சதுக்கத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜீன் 13 -**

**தயாநிதி மாறன் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில், சென்னை மெரினா அண்ணா சதுக்கத்தில் ரூ.1.20 கோடியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**



பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா நினைவுப் பேருந்து நிலையம் மத்திய சென்னை எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டதை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு மற்றும் தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நே.சிற்றரசு எம்.சி. உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

சென்னை மெரினா கடற்கரை அருகேயுள்ள அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்திலிருந்து சென்னையின் பல்வேறு இடங்களுக்கு 200 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த பேருந்துகள் மூலம் நாள்தோறும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்து வருகின்றனர்.

நீண்ட காலமாக பேருந்து நிலையம் திறந்தவெளி மைதானமாக இருந்தது. இதனால், வெயில், மழை காலங்களில் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இதை தவிர்க்க நிழற்குடையுடன் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதை தொடர்ந்து திறந்த மைதானமாக இருந்த இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஒரு கோடியே 20 லட்சம் ரூபாயை ஒதுக்கினார். தொடர்ந்து கடந்த 2 மாதங்களாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடந்து வந்தது. இந்த பணிகள் அனைத்தும் முடிவடைந்தன.



₹1.20 கோடியில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம்.

இந்நிலையில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.1.20 கோடியில் மெரினா அண்ணா சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையம் திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய பேருந்து நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மேலும், பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டும் அறையையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். 15 ஓட்டுநர்கள், நடத்துனர்களுக்கு இலவச சீருடைகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, ஆயிரம்விளக்கு எம்.எல்.ஏ. டாக்டர் எழிலன், துணை மேயர் மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) சமீரன், மத்திய வட்டார துணை ஆணையர் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழு தலைவர் எஸ்.மதன்மோகன், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். அதனடிப்படையில் அண்ணா சதுக்கத்தில் பொதுமக்கள் மற்றும் பயணிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அண்ணா சதுக்கத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கும் கழிப்பிடங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வர ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்காதது தொடர்பாக தீவிர விசாரணை செய்த பின்னர்தான் கல்வித்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் பரிமாற்ற குழப்பத்தால் இது நடந்து விட்டது. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்படும். கடந்த 2 ஆண்டுகளாக தேசிய அளவிலான போட்டிகள் நடைபெறாமல் இருந்துள்ளது. காணொலி மூலமாக நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்று உள்ளனர். அதன் பின்னர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுள்ளனர். மீண்டும் இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் பார்க்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னை - சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, ஜுன் 13-*

*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது கனமழை பெய்து வருகிறது.*

*மேற்கு திசை காற்று மற்றும் வெப்ப சலனம் காரணமாக நேற்று (12.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது.*


*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.*

# கலைஞரின் உருவமாக மாறிய 2,752 பணியாளர்கள்!

மதுரை, ஜீன் 13-

மதுரை மாநகராட்சியில் 2,752 தூய்மைப் பணியாளர்கள் கலைஞரின் உருவ வடிவில் நின்று உலக சாதனை முயற்சி நிகழ்ச்சியை நடத்தினர். முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில், மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலத்தில் உள்ள ரேஸ்கோர்ஸ் மைதானத்தில், கலைஞரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில், உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. மேயர் இந்திராணி பொன்வசந்த், மாவட்ட ஆட்சி தலைவர் சங்கீதா, ஆணையாளர் பிரவீண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில், 'மாநகராட்சியில் பணிபுரியும் 2,752 தூய்மை பணியாளர்கள் கலைஞரின் உருவத்தை போல நின்று சாதனை புரிந்தனர். பின்னர் அமைச்சர் பி.டி. ஆர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில்,



தூய்மை உறுதிமொழியேற்றனர். இந்த நிகழ்வில் பங்கேற்ற 'டிரையம்ப் வேர்ல்ட் ரெகார்ட்ஸ் நிறுவனம்' உலக சாதனைக்கான விருதை தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரிடம் வழங்கினர். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், துணைமேயர் நாகராஜன், மண்டலத்தலைவர்கள் , துணை ஆணையாளர் முஜிபுர் ரகுமான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.